**12.06.2026**

அ.வ.எண்.33/2022

<u>வா.சா.1 சந்திரன் குறுக்கு விசாரணை</u>

1. தாவாசொத்து ஆதியில் பட்டம்மாள் சொத்து என்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். 19.09.1997 தேதியில் பட்டம்மாள் என்பவர் ராஜேந்திரன் என்பவருக்கு பதிவு செய்யபடாத பொது அதிகாரம் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு அதை பற்றி தெரியாது. 23.09.1997 தேதியில் ராஜேந்திரன் என்பவர் விஜயலட்சுமி என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. விஜயலட்சுமி என்பவர் 23.09.1997 தேதியில் முரளி எனப்வருக்கு பொது அதிகாரம் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. முரளி என்பவர் 3ம் பிரதிவாதி லோகநாதன் என்பவருக்கு 25.05.2006 தேதியில் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு அதை பற்றி தெரியாது. மேற்சொன்ன 19.09.1997 தேதி பொது அதிகார பத்திரம் மற்றும் 23.09.1997 தேதி கிரைய பத்திரத்தில் என்னுடைய கிரையதாரரான ராமலிங்கம் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

2. நான் 28.03.2008 தேதியில் தாவாசொத்தை ராமலிங்கம் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். கிரையம் வாங்கும் சமயத்தில் நான் வழக்கறிஞராக பணி புரிந்தேன். பொதுவாக ஒரு சொத்தை கிரையம் வாங்கும்போது வில்லங்கம் பார்ப்பார்கள் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்குவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு

வில்லங்கம் பார்த்தேன். நான் வில்லங்க சான்றிதழை பார்த்த போது எந்தவொரு பரிவர்த்தனை குறிப்பேடு இருந்ததா என்றால் இல்லை. மேலும் ராமலிங்கம் கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தை பற்றி பதிவேடு வில்லங்க சான்றிதழில் இருந்ததா என்றால் இருந்தது மற்றும் திருத்தல் பத்திர பதிவேடும் இருந்தது.

**3**. தாவாசொத்திற்குரிய சர்வே எண்கள் மற்றும் அதன் அருகில் உள்ள பட்டம்மாள் சொத்திற்கு சேர்த்து வில்லங்க சான்றிதழ் பார்த்தேன். **3** ம் பிரதிவாதி லோகநாதன் மற்றும் **1** ம் பிரதிவாதி விஜயலட்சுமி கிரைய ஆவணங்கள் பற்றி நான் பார்த்த வில்லங்க சான்றிதழில் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன வில்லங்க சான்றிதழ் என்னிடம் உள்ளதா என்றால் வீட்டில் உள்ளது, நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும். எனது கிரையதாரர் ராமலிங்கம் இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.**168/2005** என்ற வழக்கை இதே பிரதிவாதிகள் மற்றும் பட்டம்மாள் மீது தாக்கல் செய்திருந்தார் என்றால் அதை பற்றி தெரியாது.

**4**. மேற்சொன்ன வழக்கு **25.10.2013** தேதியில் இரு தரப்பினர் முழுவிசாரணைக்கு பின்பு தள்ளுபடி செய்யபட்டு அதன்பின் மேல்முறையீட்டு எண்.**14/2014** மாண்புமிகு மதுராந்தகம், சார்பு நீதிமன்றத்தில் **13.07.2013** தேதி தள்ளுபடி செய்யபட்டது என்றால் எனக்கு தெரியாது. எனது கிரையதாரர் ராமலிங்கம் என்னுடைய ஊர்காரரா என்றால் பக்கத்து ஊர்காரர், அவர் பட்டம்மாளின் உறவினர் ஆவார்.

மேற்சொன்ன வழக்குகளை பொறுத்து ராமலிங்கம் மீது நான் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இதுநாள் வரையில் எடுக்கவில்லை, ஏனென்றால் அவர் இறந்துவிட்டார், இனிமேல் நடவடிக்கை எடுப்பேன்.

**4**. மேற்சொன்ன வழக்குகளில் நான் தரப்பினராக சேர்வதற்காக நடவடிக்கை எடுத்தேனா என்றால் தற்போது வரை எடுக்கவில்லை, இனிமேல்தான் எடுக்க வேண்டும். விஜயகாந்த் கேப்டன் பண்ணை என்ற ஆர்ச்க்கு சற்று அருகில் தாவாசொத்து உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டபடும் புகைப்படத்தில் உள்ள இடம் தாவாசொத்தா என்றால் அந்த புகைபடத்தில் இடம் உள்ளது, ஆனால் தாவாசொத்துதான் என்று உறுதியாக கூறமுடியாது. தாவாசொத்திற்கு அருகில் கால்வாய் மற்றும் கிணறு கிடையாது என்றால் சரியல்ல, கால்வாய் மற்றும் பம்பு செட் உள்ளது. நான் கடைசியாக தாவாசொத்திற்கு எப்போது சென்றேன் என்றால் **6** மாதத்திற்கு முன்பு சென்றேன், அப்போது விஜயகாந்தின் சொத்தை சமீரா என்ற கம்பெனிக்கு விற்றுவிட்டார் என்று கேள்விபட்டேன். அந்த கம்பெனி தார் சாலை அமைத்துள்ளார்கள் என்றால் சரிதான், தாவாசொத்தின் நடுபுறம் அந்த தார் சாலை உள்ளது என்றால் சரிதான்.

**6**. **2**ம் பிரதிவாதி முரளி என்பவர் விஜயகாந்த் கம்பெனியில் வேலை செய்தார் என்றால் சரிதான். **2**ம் பிரதிவாதிதான் விஜயகாந்த்க்கு அனைத்து சொத்தும் வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல. தாவாசொத்து விஜயகாந்த் சொத்துடன் இணைந்திருந்ததா என்றால் சரிதான், ஆனால் என்னிடம் கேட்டுதான் **2**ம் பிரதிவாதி முரளி தார் சாலை

அமைத்தார். 2ம் பிரதிவாதி முரளி தாவாசொத்துடன் விஜயகாந்த் சொத்தை இணைத்தாரா என்றால் சரிதான், இணைத்து தாவாசொத்தின் நடுபுறம் மண்ரோடு அமைத்தார் என்றால் சரிதான். தற்போது சமீரா கம்பெனி வந்தபிறகு மண்ரோடு தார்சாலையாக மாறிவிட்டது என்றால் சரிதான்.

7. மேற்சொன்ன தாவாசொத்தை இணைத்ததை பற்றிய விவரங்களை நான் எனது பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி மற்றும் 3ம் பிரதிவாதிதான் 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தார்கள் என்றால் சரிதான். விஜயகாந்த் கிரையம் பெற்ற பிறகுதான் நான் தாவாசொத்தை கிரையம் பெற்றேன் என்றால் முந்தைய கிரையத்தை பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய கிரையதாரர் வழக்கு தாக்கல் செய்து தள்ளுபடி ஆன பிறகு நான் தாவாசொத்தை கிரையம் பெற்றது சட்டபடி செல்லாது என்றால் சரியல்ல. என்னுடைய கிரையதாரர் ராமலிங்கத்திற்கு தாவாசொத்தில் எந்த உரிமையும் இல்லை என்று தீர்ப்பான பிறகு நான் தீர்ப்பை மீறி கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய கிரையதாரர் ராமலிங்கமும் நானும் சொத்தை வாங்கி விற்கும் தொழில் செய்து வந்தோம் என்றால் சரியல்ல, அவர் எனது ஊர்காரர் ஆவார்.

8. நான் தாவாசொத்தை வேண்டும் என்றே போலியாக கிரையம் ஏற்படுத்தி வில்லங்கம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக ஏற்பட்ட கிரைய ஆவணம் என்றால் சரியல்ல. நான் தாவாசொத்தில் பயிர் செய்து

வந்ததற்கு அடங்கல் இருக்கிறதா என்றால் இருக்கிறது. ஏரிபாசனம் கால்வாய் விஜயகாந்த் வாங்கிய 200 ஏக்கர் வழியாகதான் வரவேண்டும் என்றால் சரியல்ல. என்னுடைய சொத்தை தாண்டிதான் அந்த சொத்திற்கு செல்லவேண்டும். தாவாசொத்திற்குள் கால்வாய் செல்கிறது என்பதை காட்டுவதற்கு ஆவணம் உள்ளதா என்றால் இருக்கிறது. மேற்சொன்ன ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை, ஆனால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். எனவே நான் தாக்கல் செய்துள்ள வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் மற்றும் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர் கோரிக்கையின் பரிகாரம் கிடைக்கவேண்டும் என்றால் சரியல்ல.